சிவமயம்

gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலே மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புக். ருஅ] யாழ்ப்பாணம்—வியஞ்ல கார்த்திகைமீ உஅஉ (1946 டிசம்பர் 13 வெள்ளிக்கிழமை) [இல எ௦


# சிவநெறிச் செல்வத் தீந்தமிழ் நாவலன்

## எங்கள் நாவலன்.

இன்று நாவலர் திருநாள். சைவத் தமிழ் மக்கள் செய்வதின்னதென் றறியாது தவித்த காலத்தில், தம் தொன்மையை மறந்து, தம் மாண்பு மிக்க சமயக் கொள்கைகளை மறந்து, தம் பூர்வ நாகரீகத்தை, கலாசாரத்தைத் துறந்து அலைந்த காலத்திலே, ஆதரிப்பாரற்றுத் தமிழன்னை பிரலாபித்த காலத்திலே, அவர்களைத் தட்டி எழுப்பி, அவர்கள்தம் தொன்மையை விளக்கி, தமிழன்னைக்குப் புத்துயிர் கொடுத்த எங்கள் நாவலப் பெருந்தகை சிவபதம் அடைந்த திருநாள் இன்று. இன்று இந்த இலங்கை சுயராச்சியப் பாதையை நோக்கி முன்னேறுகிறது என்றல் அதற்கு மூல காரணர் எங்கள் நாவலப் பெருமான் தாம் என்று துணிந்து கூறலாம் சைவம் உள்ள அளவும், தமிழ்உள்ள அளவும், தமிழ் மக்கள் உள்ள அளவும், "நாவலர்" என்ற பெயர் ஒரு போதும் மறையாது; நாவலன் வாழ்க! சைவம் வாழ்க! தமிழ் வாழ்க!

திருச்சிற்றம்பலம்.

o

நல்லைநக ராறுமுக நாவலர்
பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே
சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபுரா ணுகமங்க
ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.


o

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்"

## சிவபதம் சார்ந்த திருநாள்

அச்சமுற்று அடிமைகளாய் அயலார்க்கஞ்சி
அந்நியரின் மதம்புகுந்து அவர்தங்கையாற்
பிச்சைபெறும் நிலையடைந்த பேதைமாந்தர்
பிறப்புரிமை சிறப்பாக எடுத்துக்காட்டி
பச்சைமரத் தாணிபோற் பதியுஞ்சொல்லாற்
பாதிரிமார் வாயடங்கப் பதிலுங்கூறி
இச்சகத்தில் எம்சைவந் தழைக்கச்செய்த
எழில்நல்லை நாவலன்றாள் ஏத்துவோமால்.

—க. இராமச்சந்திரன்.



ஜனனம்: *1822*-ம் ஆண்டு மார்கழி மஉ

சிவபதப்பேறு: *1879*-ம் ஆண்டு கார்த்திகை மஉ

## தியாக புருஷன்.

இன்று சமய ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் பலர்; சமய வாதங்களில் ஈடுபடுவோர் இன்னும் பலர்; அரசியற் பூசல்களில் ஈடுபட்டு விவாதம் புரிவோர் இன்னும் மிகப் பலர். இவர்களில் எத்தனைபேர், தாம் கொண்ட லட்சியத்துக்காகத் தியாகம் செய்ய முற்பட்டு நிற்கின்றனர்? சைவத்துக்கும் தமிழுக்கும், இந்நாட்டுக்குமாகத் தம் உடல்பொருள் ஆவி மூன்றனையும் திரி கரண சுத்தியாகத் தியாகம் செய்த வள்ளல் எங்கள் ஆறுமுக நாவலச் சிங்கமே! இன்றைக்கு தமிழ் மக்களாகிய நாம், சைவர்களாகிய நாம் ஓர் சாதியார் என்று சமூகத்தார் என்று தலைநிமிர்ந்து நிற்கிறோம் என்றல், அதனை ஆக்கி வைத்தவர் எங்கள் நாவலர் என்னும் சீரியரே. அவர் விதைத்த விதை இன்று கனிதரு விருட்சமாய் நிற்கிறது. எங்கும் சிவ மணம் கமழ்கின்றது: எங்கும் தமிழ் மணம் பரிமளிக்கின்றது. அன்னவர் நாமம் வாழ்க!

திருச்சிற்றம்பலம்.

o

சங்கேந்து மாற்கரிய
சங்கரனைத் தன்னிதய
பங்கே ருகம்வைத்த
பண்பானை—எங்கோனை
ஆறுமுக நாவலனை
யர்ச்சித் தடிபணியிற்
பாறும் பவநோய் பறிந்து.

o

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல்
வேறொன் றறியேன் பராபரமே.

## நற்றமிழ்க்குரிசில் நாவலன்

செந்தமி ழுய்ய, சைவத் திருநெறி விளங்க வந்தோன்!
அந்தமில் கல்வி கேள்வி யாழியைக் கடைந்து, நாளும்
தந்தனன் அமுத நூல்கள்; சாவிலா வரத்தைப் பெற்ற
நந்தமி ழுள்ள மட்டு நாவலன் வாழ்க மாதோ!

கல்வியின் வரம்பு கண்டோன்; கடவுண்மாக் கலைகளுக்கிங்
கெல்லையே யானேன், வான்போல் இன்னுயி ருலகுக் கெல்லாம்
செல்வத்துட் செல்வமான சிவநெறிச் செல்வஞ் சேர்த்து
நல்கிய வள்ளலான நாவலன் வாழ்க மாதோ!

அங்கையி னெல்லி போலே யாகமப் பொருளு ணர்ந்தோன்
சங்கரன் அருமைச் செல்வி யாகிய தமிழு ணங்கைத்
தங்கமாம் அரியணை மீ தேறியே தமிழ ரான
நங்குல மூப்யச் செய்த நாவலன் வாழ்க மாதோ!

அச்சத்தைத் துறந்தான், உள்ளத் தரனையே நினைந்தான் மூவர்
சொற்சுவை அணிந்தான் ஆன்றோர் தொகுத்தநன் னூல்கள்வாழ
மெச்சுநற் பணிகள் செய்தான்; வியன்றமிழ் வியாச னென்றெம்
உச்சிமேல் வைக்கத் தக்க நாவலன் ஒளிர்க மாதோ!

தமிழினைப் புதுக்க வந்த தத்துவப் புலவ னென்கோ!
தமிழ்ப்பணி தனை மணந்த தவமணிச் சைவ னென்கோ!
தமிழிசை பரவ வந்த தாரகக் குழலே யென்கோ!
அமிழ்தினு மினிய சொல்லான் அறுமுக நாவ லோனே!

நற்றமிழ்க் குரிசிலான நாவலன் வாழ்வைப் பாரீர்!
கற்றவன் புரிந்த செஞ்சொற் கனிதமிழ்த் தொண்டைக் காணீர்!
பெற்றநந் தாயின் வீரப் பெருமையை நிலைநிறுத்த
முற்றிய காத லோடு முத்தமிழ் முழக்கஞ் செய்வீர்!

—சுத்தானந்த பாரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஜ
கார்த்திகை உஅ௨ வெள்ளிக்கிழமை

## நாவலர் திருநாள்

இற்றைத்தினம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவல ரவர்கள் குருபூசையை இலங்கையிலும் தென்னிந்தியாவிலு முள்ள சைவத் தமிழ் மக்க ளனைவருங் கொண்டாடுந் தினம்; சில இடங்களில் இத்திருநாளை நாளைத்தினங் கொள்வரெனவும் அறியலானேம். தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களையும் ஏனைய அருட்பாக்களையும், கந்தபுராணம் பெரியபுராணம் திருவாதவூரடிகள் புராணமென்னு மிப் புராணங்களையும், ஔவைபாடல் திருக்குறள் என்னும் நீதிநூல்களையும் எத்தனை முறை மீட்டுமீட்டுப் படித்தாலும் அவை படிப்போர்க்குத் தெவிட்டமாட்டா; இங்ஙனமே சைவத்தையும் தமிழ் மொழியையும் வளர்த்த சீராளராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்க ளுடைய தொண்டின் திறத்தையும், பேராற்றலையும், தூயநெறியையும், சமயம் பாஷை யென்னு மிவற்றிற் கொண்ட பேரபிமானத்தையும், இவைக ளெல்லாவற்றிற்கும் மேலாகச் சொல்வன்மையையும், அஞ்சா நெஞ்சம் படைத்த பண்பையும் எத்தனைமுறை எழுதினாலும் எடுத்துப் பேசினாலும் அவை எழுதுவோர்க்கும் பேசுவோர்க்கும், படிப்போர்க்கும் கேட்போர்க்கும் தெவிட்டா; இது அநுபவத்திற் கண்டது.

மேலே சொல்லப்பட்ட அரும் பெரும் நூல்கள் மீட்டும் மீட்டும் பயில்வதனால் தெவிட்டா தொழிதல் மாத்திரத்தோடு நிற்பனவல்ல; தொட்டனைத்தூறு மணற்கேணி யென்றவாறு, இந்நூல்களில் மேலும்மேலும் பயில்வதனால், அங்ஙனம் பயிலுந் தோறும், முதன்முறை இரண்டாமுறை பயின்றபோது, பயின்றவர்க்குப் புலப்படா நுண்பொருண்கள் மூன்றா நாலா முறைகளிற் புலப்படுதலைக் காணலாம். இங்ஙனமே, நாவல ரவர்களைப் போற்றி அறிஞராயுள்ளார் எத்தனைமுறை எழுதினாலும், பேசினாலும், அவையெல்லாம் எழுதுவோர்க்கும், பேசுவோர்க்கும், படிப்போர்க்குங் கேட்போர்க்கும் புத்துணர்ச்சியைப்புகட்டும் இயல்பினவாகும். ஆனதால் எங்கள் நாவலப் பெரியார் விஷயத்தில் அறிஞர்கள் ஏதும் எழுதும்போதும் சொல்லும்போதும், படிக்கும்போதுங் கேட்கும்போதும் அவைசொன்னதே சொல்லியும், கேட்டதைக் கேட்டும், கண்டதே கண்டும் காலங் கழித்தல் என்னுங் குற்றத்தின்பாற்படா வென்ற அறிக.

நாவல ரவர்கள் சைவத்தையுந் தமிழையும் வளர்த்தற் பொருட்டு அக்காலத்திலே செய்து வந்த செயற்கருஞ் செயல்களையும், சிற்சில சமயங்களில் இத் தொண்டுகளில் ஈடுபட் டுழைக்கும்போது அப்பெரியாருக்கு நேர்ந்த இடைஞ்சல்களையும், திருவருளினால் அவ் விடைஞ்சல்கள் ஆதவனைக்கண்ட பனியென அகன்றமையையும் இன்ன பிறவற்றையும் இக்காலத்துள்ள மக்களும் பிற்காலத்துவரும் மக்களும் ஒருவாறு அறிந்து கொள்வதற்கு நாவல ரவர்களைப் பற்றிய வரலாறு, பிரபந்தத்திரட்டு என்னு மிவைகள் புத்தக வடிவமாக இப்பொழுது உள்ளன; நாவலர் திருநாள் போன்ற விசேட காலங்களிலும் அப்பெரியாரைப்பற்றி அறிஞர் செய்யும் வெளியீடுகளினாலும், பிரசாரங்களினாலும் இக்காலத்து மக்களறிதல் முடியும். ஆனால் நாவலப் பெரியாரை இற்றைவரையேனும் பின்பற்றிச் சைவசமயத்தையும் செந்தமிழ் மொழியையும் வளர்த்தற்கு இக்காலத்துள்ள மக்கள் எவரேனும்முயற்சி செய்கின்றார்களோ என்பது தான் இப்பொழுது ஆசங்கைக்குரியது;

எல்லாரும் நாவலர் செய்தது போற் சற்கருமங்களில் ஈடுபட்டு உழைக்கவேண்டுமென்று நாம் கேட்கவில்லை; அது எவர்க்கும் அரிது; ஏன்? ஏனெனில் அதற்கு நியாயம் எடுத்துக்காட்டுகின்றோம்:-

‘நாவலரைப்போல முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்களில்லை; ஒருவேளை இருந்தாலும், அவரைப்போலத் தமிழ்ப்பாஷையையும் நல்லொழுக்கத்தையும் சைவசமயத்தையும் வளர்த்து நல்லதமிழ் வசனநடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ்நாட்டாருக்கு உபகாரஞ் செய்தவர் வேறொருவருமில்லை; பொருள் வரும்படிக்காகப் பிறரைப் பணியாதவர்களும் அவரைப்போல் ஒருவருமில்லை”

இது யார் கூற்று? சாமானியமான ஒருவர் கூற்றன்று; சென்னையில்மேல் நீதிமன்றத்துபிரதம நீதியரசராகவிளங்கியபிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்கள், 1913-ம் ஆண்டு ஏப்பிரல்மாசம் 26-ந்வ சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைப் பரிசளிப்புக் கூட்டத்தின்போது, நாவலரையா அவர்களைப்பற்றிக் கூறிய பாராட்டாகும். “ஆனதால் ஆறுமுகநாவலரைப்போலே அவதார புருஷன் ஆருமில்லை யினிமேலே” என்றெழுந்த பாட்டுப் பொய்யாகாதென நாம் எண்ணிக்கொள்ள வேண்டும்; அந்த அவதார புருஷரைப்போல் இன்னொருவர் வருதல் அரிதெனினும், தம்மால் இயன்ற அரும் பெருஞ் செயல்களைத் தமது தகைமைக்கேற்பத் தமிழ் மக்கள் சைவமக்கள் எவரும் தூய சிந்தனையுடன் முயற்சி செய்தால் ஏதும் நன்மை யுண்டாகாமல் விட முடியுமா? அறச் செயல்களைச் செய்யத் தொடங்கும்போதே எவரும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்னும் இத்தீமைகளை அறவே யொழித்துத் தூய சிந்தனையுடனும் நன்னோக்கத்துடனுஞ் செய்தல் வேண்டுமென்று பெரியார் பணித்துள்ளனரல்லவா? இந்த இரகசியத்தைக் கடைப்பிடித்தன்றோ நாவலர் அருஞ் செயல்களைச் செய்து மங்காப்புகழையும் பெரும் புண்ணியத்தையும் ஈட்டினாரென்று காலங்கண்ட முதியோர் சொல்லக் கேட்டிருக்கின்றோ மன்றோ? நாவலர் பேராலும் அவருடைய அக்காலத்திய விருப்பமென்று காரணங்காட்டியும் கல்லூரிகள், கலாசாலைகள், சபைகள், சங்கங்கள், கோயில்கள்,மடங்கள், வாசகசாலைகள் முதலியவற்றைக் காலந்தோறும் தாபித்து நடத்துவோர், மேலே சொல்லப்பட்ட தீமைகள் நான்கனுள் ஒன்றையேனும் தவிர்த்து மேற்படி கருமங்களைச் செய்ய முயல்வரேல், அவர்கள் சைவசமயம் தமிழ்மொழி யென்னுமிவற்றின் பொருட்டும், தமிழ்மக்கள் பொருட்டும் பெரும் நன்மை செய்தல் இயலும்.

நாவலரைக்காட்டிலும் சிறந்த வித்துவான்கள், புலவர், பண்டிதர்கள் முற்காலத்தில் இருந்தனரென்று சொல்லலாம்; ஆனால் அவர்களைக் காட்டிலும் நாவலர் சோபித்தற்குக் காரணம் இப்பெரியார் தாம் எதனை எழுதியும் பிரசங்கஞ் செய்தும் பிறர்க்குப் போதித்தனரோ, அதனை முதல் தாமே தவறாது அநுட்டித்து வந்தார்; போதனையொன்றும் சாதனை பிறிதொன்றுமாக விருப்போரெவரும் சோபிதமுறமாட்டார்கள்; மேலே சொல்லப்பட்ட கருமங்களையும் நாவலரைப் பின்பற்றிச் செய்ய முயன்றவர், முயல்கின்றவர் முயல்பவராகிய எல்லாரும், நாவலப் பெரியாரைப்போல முதன்முதல் தாமேஅவற்றை அநுஷ்டித்துவரல் வேண்டும்; இதுவே நாவலர் போதனையின்படி மக்கள் நடத்தற்கும், அவருடைய பிற்காலத்தாராயுள்ளார் செய்யுந் தருமங்கள் விருத்தியாதற்குஞ் சிறந்த உபாயமாகும்.

## நாவலர் திருநாள்

இம்மாதம் 14-12-46 சனிக்கிழமை காலை 10 மணியளவில் வேர். சனகசபை வித்தியாசாலை மண்டபத்தில், வேதாரணிய சைவகுரு கனம் மு. சோமசுந்தரக் குருக்கள் அவர்களால் சிவபூசையும் ஷை பாடசாலை ஆசிரியர் ஸ்ரீமத் வே. சங்கரப்பிள்ளை அவர்களால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களின் சரிதம், பக்கவாத்திய சகிதம் பிரசங்கமும் நடாத்தப்படும்.

* *

### நீர்வேலியில்

நீர்வேலிச் சைவஇளைஞர் சங்க ஆதரவில் இம்மாதம் உகவ (14 12-46) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் சிவபதமடைந்த தினம் நீர்வேலி, பொதுசன நெசவுத் தொழிற்சாலை மண்டபத்தில் விசேடமாகக் கொண்டாடப்படும். இந்தியாவில் இருந்து புதிதாக வரைந்து கொண்டுவரப்பட்ட நாவலர் திருவுருவப் படத்தை இந்துசாதனப் பத்திராதிபர் ஸ்ரீமான் ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் தலைமை வகித்துத் திறந்துவைப்பார்கள். அதன்பின் குருபூசை நடைபெறும் பின்னர், முடிக்குரிய நியாயவாதி ஸ்ரீமான். த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள்,

### 500 கோடி பவுன்

கடந்த யுத்தத்தின் பயனாக இங்கிலாந்து [illegible] உள்ள மற்றும் நாடுகளுக்கு 500 கோடி பவுணுக்குக் கடனாளியாக விருக்கிறது.

# உடனே விலக்க

## பொலிஸ் தலைவருக்கு அறிவித்தல்

இலங்கையின் உள்நாட்டு மந்திரி நிருவாகசபை, இப்போது பொலிஸ் தலைவராகவுள்ள மிஸ்ரர் பேக்கன் என்பவரையும் வேறும் இரு ஐரோப்பிய அதிகாரிகளையும் உடனே நீக்க வேண்டுமென்று நிச்சயித்திருக்கிறது.

மிஸ்ரர் பேக்கனின் இடத்துக்கு இலங்கை சிவில் சேர்விஸ் பகுதியில் உள்ள மிஸ்ரர் ஏ. ஜி. ரணசிங்கா, அல்லது இப்போது மத்திய மாகாணத் தலைவராகவுள்ள மிஸ்ரர். ஆர். அலுவிகாரை என்பவரை நியமிக்க வேண்டும் என்றும் சிபார்சு செய்திருக்கிறது.

# 697 ஆட்சேபனைகள்

## பதில் கூறத்தான் வேண்டும்

சேர். ஒலிவர் குணத்திலக தலைவராகவிருந்த ஊர்ப்பாதுகாப்புப் பகுதி செய்த செலவுகள் சம்பந்தமாக 697 ஆட்சேபனைகளைக் கணக்குப்பரிசோதனை அதிகாரி விடுத்திருந்தார். அவ் வாட்சேபனைகளுக்கான சமாதானங்கள் கிடைக்கின்றனவா? அல்லது அவை பொய்யாய்ப் பழங்கதையாய், மெல்லமறைந்து விடுமா எனறு பத்திரிகை நிருபர், இப்போது கணக்குப் பரிசோதனை அதிகாரியாகவுள்ள மிஸ்ரர். ஆலென் ஸ்மித் அவர்களைக் கேட்டார். அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லை. நான் இவ்விஷயத்தைப் பாராமுகமாக விடமுடியாது. 697 கேள்விகளுக்கும் சமாதானம் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று மிஸ்ரர் ஸ்மித் பதில் இறுத்தார்.

இப்போதும் அந்த ஆட்சேபனைகளிற் சிலவற்றுக்குப் பதில் கிடைத்திருக்கின்றதாம். ஆனால் இப்போதுள்ள நிலையில் அப்பதில்கள் திருப்தியானவையா அன்று என்பதைக் கூற முடியாது என்று மிஸ்ரர் ஸ்மித் அபிப்பிராயம் தெரிவித்தார்.

## 3-ம் கந்தாயக் ‘கூப்பன்கள்’

வடஇலங்கைப் புடைவை வர்த்தக சங்கத்தின் ஆதரவில், சென்றவாரம் ஓர் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் பெரியகடையில நிகழ்ந்தது இக்கூட்டத்திற்கு வடமாகாணப் புடைவைக் கட்டுப்பாட்டதிகாரி தலைமை வகித்தார். மூன்றும் கந்தாயத்துக்குரிய புடைவைக் கூப்பன்களை உடனே உபயோகத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும்; புடைவைக்குத் தக்கவாறு ‘புள்ளி’களை (பாயின்ற)க் குறைக்க வேண்டும் என்றும் ஓர் தீர்மானம் அக்கூட்டத்தில் நிறைவேறியது.

### கொழும்பு நகரசபை

கொழும்பு நகரசபைத்தேர்தல் முடிந்து விட்டது. தெரிவு செய்யப்பட்ட 30 அங்கத்தவர்களில் 19 பேர் நகரசபைக்குப் புதியவர்கள். 11 பேர் முன்னர் அங்கம் வகித்தவர்கள். புதியவர்களில் இருவர் சமசமாஜக் கட்சியினர். ஒருவர் சமதர்மவாதி.

### நிபுணர் வருகிறார்

இலங்கையின் கைத்தொழில்களை அமைக்கும் திட்டத்தில், அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்குப் பிரபல பிரிட்டிஷ் எஞ்ஜினியரான டக்ரர் அன்டர்வுட் என்பவர் இன்னும் 10 நாட்களில் இலங்கைக்கு வருவார் என்று ஓர்செய்தி கூறுகிறது.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இக்கல்லூரியிலும், இதற்குரிய மகளிர்கலாசாலையிலும் தைப்பொங்கல் விடுமுறைநாட்பொருட்டுஇன்றுதொடக்கம் ஒருமாச காலத்திற்கு விடுமுறை யுதவப்படுமென அறியலானேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர நாவலர் பெருமான்!

## அஞ்சாது பணி கண்ட அறிஞன்

(சிவநெறிச் செல்வர்: திரு. ஸி. கே. சுப்பிரமணிய முதலியார் B. A, B. L,)

"பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்பது ஒரு பழமொழியாம். பூ என்றால் தாமரையே: மல்லிகைப்பூ – முல்லைப்பூ முதலாக இன்ன பூ என்று சொன்னாற்றான் அவை விளங்கும். ஆனால் ஒன்றும் சொல்லாமல் பூ என்றால் தாமரையையே குறிக்கும். அதுபோல "நாவலர்" என்றால் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரையே குறிக்கும் என்பது என் அநுபவம். நான் சிறுவயதில் பள்ளிக்கூடத்திற் பயிலும்போதே, நாவலர் சைவவினாவிடை, பாலபாடம், நன்னூல், பெரியபுராண வசனம், இவை என் கையில் வந்தன; யார் தந்தனரோ அறியேன்; என் இளம் வயதிலேயே தந்தையை இழந்தேன்; ஆதலின் அவர் தரவில்லை; ஆனால் அவர் தமிழ் வித்துவான்; நாவலர் ஆயுட் காலத்தில் வாழ்ந்தவர்; அவர்கூடப் பழகிய பல பெரியார்களின் கூட்டம் என் ஊரில் அப்போது இருந்தது: அவர்களுடன் என்னையும் சிலசில போது சேர்த்துக் கொள்வார்கள், அவர்கள் பேசிக்கொள்ளும்போது நாவலர் பதிப்பு, நாவலர் வசனம் என்றெல்லாம் பெருமிதத்துடன் பேசிய பேச்சுக்கள் என் மனசை வசப்படுத்தி ஈர்த்தன. அவர்கள்தாம் இப்புத்தகங்களை எனக்குத்தந்திருக்கவேண்டும். எனது ஆசிரியர் பண்டிதர் ச. திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்களிடம் நான் தமிழ் பயின்றகாலம் எனக்குச் சிறிது வயதுவந்தகாலம், அவர் தமிழ் பயிற்றியபோதெல்லாம் பல சமயங்களில நாவலரது தமிழ் உரைநடையின் யாவரும் அறியும் எளிமையினையும் உயர்வினையும்பற்றி அவ்வாறு எழுதவும் பேசவும் பழகவேண்டும் என்று போதித்ததுண்டு. ஆனால் அவ்வாறுபழகியுள்ளேனு என்பதைத் தமிழுலகம் நிச்சயிக்க வேண்டும், ஒன்று சொல்லுவேன்; நாவலரது உரைநடை யாவரும் பழகிவிடமுடியாததுதான். Inimitable என்பர் நவீனர். ஏன்? உரைநடை மட்டுமா? அவரது ஒழுக்க நடையும் அப்படித்தான்; சைவ வீரநடையும் அவ்வாறுதான்.

### காலம், ஊர் நல்லூர்

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த சைவப்பெரியார், தமிழ்ப் பெரியார்களுள் நாவலர் தலைசிறந்து விளங்கினார் என்றால் அது உண்மையேயாம். தமிழ்நாட்டின் ஒருபகுதியான இலங்கைத்தீவில் வடபகுதியான யாழ்ப்பாணத்தில் ஒரு பகுதியான நல்லூரில் அவதரித்தார்; சிலருக்குத்தான் எவ்வாறு ஊரும் பேரும் இயல்பாகவே அமையும். நல்லார் பிறதற்கு நல்லூர்தானே அமையும்; அது அதற்கு முன்னும் நல்லூர்தான் பின்னும் நல்லூர்தான். என்றும் நல்லூரேயாகும்.

### அச்சுக்கூடம்

தமது ஊராகிய யாழ்ப்பாணத்தில் சைவப்பணிகள் பலவும் தமிழ்ப் பணிகள் பலவும் செய்தபின் சென்னைபட்டினம் வந்து பணிசெய்தனர். பின்னர் இன்றும் யாழ்ப்பாணத்தார் பெரிதும் போற்ற விளங்கும் சிதம்பரத்திலும் பெரும்பணி யாற்றினர்; சென்னையில் வித்தியாநுபாலன யந்திரசாலை நிறுவினர். அச்சுத் தொல்லையாகிய நச்சுத் தொல்லையின் கொடுமை நூல்கள் வெளியிடுவோர்க்குத்தான் தெரியும்.

எனது சிறிய அளவிலும் கூட நான் தனியாக எனது சில நூல்களை வசதியாக வெளியிட எனக்கென்று தனி அச்சுக்கூடமிருந்தால் நலமென்று பலகாலம் எண்ணியதுண்டு. ஆனால் அது சன்னியாசி கோவணம் பாதுகாவலுக்குப் பூனை வளர்க்க அவனைப் பெருங் குடும்பத்தனாக்கிவிட்ட கதைபோல முடிந்து விடுமோ என்ற அச்சம் என்னைத் தடுத்து வருகின்றது. ஆனால் நாவலர் மிக நுண்ணறிவும் விடாமுயற்சியும் உடைய வீரர். எல்லாம சிவன்செயல் என்பது மற்றவர்கள்போல அவரிடம் வாய்ப்பேச்சளவில் நின்றுவிடவில்லை:

### சமயப்பணியே தமது பணி

யாழ்ப்பாணத்திற் சைவ சமயப் பணிசெய்தபோது கிறிஸ்தவர்களின் பகைமைக்கு அவர் ஆளமாயினர். அந்நாளில் சைவத்தை விழுங்கி நிலைகுலையச் செய்தது கிறிஸ்துவமதப் பாதிரிகள் செயல். அவற்றால் சைவ சமய ஆக்கத்திலும் சைவர்களது வாழ்க்கையிலும் நேர்ந்த கேடுகளைக் கண்டு மனம் வருந்திச் சைவ ஆக்கத்துக்கு வேண்டிய பிரசங்கங்கள் துண்டுப் பிரசுரங்கள் சமயவாதக் கடிதங்கள் இவைகளில் முனைந்தனர் நாவலர். "பொலிஸ்" வீரனைக் கண்டால் திருடனுக்குப் பகைமை உண்டாவது இயற்கைதானே: "யாழ்ப்பாணச் சமயநிலை" என்ற சிறுநூல் (அளவினால் மட்டும் சிறியது; ஆனால் பொருளாற் பெரிது) இந்நிலைகளை நன்கு விளங்கும்.

கிறிஸ்தவர் மட்டுமல்ல அத்தனை கேடில்லை: "நம்மவரும்" நாவலரிடம் அத்தனை நட்பு வைக்கவில்லை: பகைகொண்டார்களென்று நான் சொல்லமாட்டேன்; வெறுப்பு வெளிப்பட்டது; யாழ்ப்பாணத்திலிருந்து தனி ஆளாக வந்தாராயினும் சென்னை வந்த நாவலரது சைவவூக்கம்நிறைந்த மனதுக்குப் பெரிதும பணிகளிருந்தன. சைவக்கண்களானபெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் இவற்றைத்தானும் எல்லாரும் பயிலும் நிலையில் நன்கு அச்சிட்ட பதிப்புக்கள் இல்லை. திருக்குறளுக்கும் பரிமேலழக ருரையுடன் நல்ல பதிப்பு இல்லை. திருக்கோவையார்உரை நாவலர்தான் பதித்தார் என எண்ணுகிறேன். வில்லியார் பாரதத்தில் வைணவர்கள் சைவமேம்பாடறிவிக்கும் பகுதிகளை நீக்கி மாறுபாடு செய்ய முயன்றமை கேட்ட நாவலருக்குப் பாரதத்தையும் வில்லியார் பாடியபடியே பதித்து வெளியிடவேண்டியதாயிற்று; கோயிற் புராணம் முதலிய சைவ நூல்களுக்கு உரையும வேண்டியிருந்தது. இவை எல்லாவற்றுக்கும் மேலாய், பண்டிதர்களேயன்றிப் பாமரர்களும், பெண்களும், சிறுவர்களும் படித்துச் சைவஉண்மைகளை உணரத்தக்கதாக மிக எளிய உரைநடையில் சைவவினாவிடை, பாலபாடங்கள், பெரியபுராணவசனம், திருவிளையாடல் வசனம் கந்தபுராணவசனம்முதலிய நூல்களை எழுதவும் அச்சிடவும் வேண்டியதாயிருந்தது; இவற்றுக்கெல்லாம் தனி அச்சுக்கூடம் தமக்கென வேண்டுமென்பதை உணர்ந்தார் நாவலர்; அச்சுக்கூடம் நிறுவுதல் பெரும் அல்லல்; அதனை நடத்துதல் அதனைவிடப் பெரும் அல்லல். இவையொன்[illegible] வித்தியா[illegible] சென்னையில் நிறுவினார்.

### சென்னை வாழ்வு

அச்சுக்கூட மின்மையால் அவர் சிரமப்பட்ட நிலையினை அவர் தொடக்கத்தில் வெளியிட்ட நூல்களினின்றும் ஒருவாறு தெரியக்கூடும், 1 திருக்கோவையாருரையுடன் ரௌத்திரி (1860) சென்னை முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம்: 2 திருக்குறள் - துன்மதி (1861) வாணிநிவேதனஅச்சுக்கூடம் 3 இலக்கணக் கொத்து முதலியவை - அட்சய (1866) கலாரத்நாகர அச்சுக்கூடம் 4 கந்தபுராணம் சுக்கில (1869) வர்த்தமானதரங்கிணி அச்சுக்கூடம், தமது பிறந்த நாட்டினையும் தமரையும் விட்டுத் தன்னந்தனியராய் இந்தியாவில் வந்தநாவலர் சென்னையில் சைவசமயநூற் பதிப்புக்களுக்கென்றே அச்சியந்திரசாலை தாபித்தார். அத்தனையும் தமது சொந்த முயற்சியும், இறைவர் மேற் பற்றுக்கோடுமே துணையாகநின்றன நாவலர் நைட்டிகப் பிரமசாரியாகவே தமது ஆயுள் முழுதும் வாழ்ந்தவராதலின் தமக்கென்று ஆஸ்திகள் ஒன்றும் தேடவேண்டியதில்லை. தேடினாருமல்லர். அவர் உடல் பொருள் ஆவி முழுவதும் சைவத்திற்காகவே ஒப்புவித்த உத்தமர்;

### யாழ்ப்பாணமும் நாவலரும்

சென்னையிலிருந்து தமது யாழ்ப்பாணத்து நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் "யாழ்ப்பாணத்தாராலே உவாந்திக்கப்பட்ட என்னை, இது எனது ஜன்மபூமியினும் சிறந்ததென்று சொல்லும்படி திருவருள் புரிந்து காத்து வருகின்ற பரமகருணாநிதியாகிய சிவபெருமான் திருவருளால்" என்ற கருத்துப்பட எழுதிய நிலையில் பல உண்மைகள் விளங்கக் காணலாம். முதலாவது யாழ்ப்பாணத்து நமர்களும் அவரை வெறுத்தனர் என்பது: இரண்டாவது சென்னையில் சைவத்திற்குச் செய்யப் பெற்ற திருப்பணிகள் அவருக்குத் திருப்தியை விளைத்தன என்பது;

சென்னைக்கும் தென்னிந்தியாவுக்கும்நாவலரைவரவழைத்தது யாழ்ப்பாணத்தாரது வெறுப்பு ஒன்றுமட்டுமன்று. தென்னிந்தியாவில் அவர் வைத்த விருப்பமும் காரணமாகும்; என்னை? சைவசமய பரமாசாரியர்களது திருவடி தீண்டப்பெற்றமையால் புனிதமான பல தலங்கள் தென்றிசையில் உள்ளன. "பூசனைக்சப் பொருந்துமிடம் பல, பேசிலத் திசையொவ்வா பிறதிசை" (பெரிய புராணம்) சைவசமயாசாரியர்களின் திருவாக்குக்கள் தென்றிசைத் தேயத்தையும் ஈழநாட்டினையும் ஒன்றுபடுத்தின. இவ்வொற்றுமையினை உணர்ந்து ஒழுகினவர் நாவலர். இந்நாள் மக்களும் இவ்வொற்றுமையினை உணர்ந்து ஒழுகினால் அரசாங்க உலகியல் நிலைகளால் வரும் பிணக்குகள் எல்லாம் ஒழியும்.

### தமிழ்ப் புலமை

இனி நாவலர்பதித்த சைவநூல்கள் சைவசமயநிலைபேற்றுக்கும் பரவுதலுக்கும் மிகவும்துணைசெய்தன; அவருடையஉரைநடைதனிச்சிறப்பு உடையது தமிழ்உரைநடைக்குநாவலரே தந்தையாவர் என்றால் அது மிகையாகாது. நாவலர் கல்விகற்ற காலத்தில் அச்சுநூல்கள் கிடையா; சிலதான் இருந்தன. ஏனைய எல்லாம் அவர்களாலும் அவர் காலத்திலும் அதற்குப் பின்னும் வெளிப்போந்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## நாவலர்பெருமான்

(திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை)

தமிழ்ப் புலவர்களுள் பொறாமை மிகுதி. ஒருவர் மற்றவரைப் (பொறாமையால்) புறங்கூறல் சகசம். இது பண்டைநாள் தொடங்கி என்றும் உள்ளது. ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவர் சரிதங்கள இவ்வுண்மையை வலியுறுத்தும். நமது நாவலரின் கல்வி, அறிவு, ஒழுக்கம், வன்மை முதலிய நற்குணங்களைக் கண்டு ஏனைய புலவர்கள் பொறாமைப் பட்டுச் சில போலிக் கண்டனங்களை வெளியிட்டனர். இதனை அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை, தாம் பிற புலவர்மீது பொறாமை காரணமாக ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. சில உதாரணங்களால் நாவலரிடம் பொறாமை யின்மையை எடுத்துக் காட்டுவாம்; மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை நாவலர் காலத்திலிருந்த ஓர் பெருங் கவிஞர்; அவரோடு நாவலர் அளவளாவியிருந்தார். அவர் இறந்தபோதும் அவருடைய மகனுக்குச் சில உதவிகள் புரிந்தார்.

சரவணப் பெருமாளையர் நாவலர் காலத்தவர். அவர் திருவள்ளுவ மாலைக்கு உரையியற்றி அச்சிட்டார். திருக்குறள் பரிமேலழக ருரையை நாவலர் 1861-ம் ஆண்டில் முதன் முதல் அச்சிட்டபோது அப்பதிப்பில் சரவணப்பெருமாளையர் எழுதிய திருவள்ளுவமாலை யுரையை அவர் பெயரோடு சேர்த்து வெளியிட்டார், திருவள்ளுவமாலையுரை அங்கும் இங்கும் சிறிதுமாற்றி இவர் தம் பெயரால் [illegible] அப்படிச் செய்யாது [illegible]பெருமாளையர் பெயராலேயே அதனைத் தமது பதிப்பில் சேர்த்தது நாவருடைய பெருந்தன்மையான குணத்தைக் காட்டுகின்றது. பொறாமையின்மையும் இதனால் அறியலாம்.

சைவபரிபாலத்தின் நிமித்தம் நாவலர் இரண்டு சைவப் பாடசாலைகளும் ஓர் அச்சுக்கூடமும் ஸ்தாபித்தார். இவற்றால் இவர் அடைந்த புகழ் அதிகம். இவர் காலத்திற்குச் சிறிது பின்னால் வந்த சில பண்டிதர்கள் இவரைப்போல் புகழும் பெருமையும் தங்களுக்கும் கிடைக்கும் என்னும் ஆசையினால் சித்தாந்த வித்தியானுபாலன யந்திரசாலை, சைவவித்தியானுபாலன யந்திரசாலை என்னும் பெயாகளுடன் அச்சுக்கூடங்களைத் தாபித்துச் சில சைவநூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். திருச்செந்தூர் முதலிய இடங்களில் சைவப் பாடசாலைகளும் ஏற்படுத்தினர். நாவலரைப்போல்தூய்மையான குணம் அவர்களிடத்தில்லாமையால் அவர்கள் பொருள் புகழ்கருதித் தொடங்கிய கருமங்களும் ஸ்தாபனங்களும் அவர்கள் காலத்திலேயே அழிந் தொழிந்தன. இதனால் யாம் அறியக்கிடப்ப தென்னெனின் தற்போத மற்றுச் செய்யும் கருமம் நிலைபெறும். ஏனையவை அழிவுறும் என்பதாம். நிற்க,

நாவலர் தருமங்கள் சில ஆண்டுகளாகச் சரிவரப்பரிபாலிக்கப்படாமல் இருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்துசாதன வாயிலாக யான் அவ்வப்போது காணும் குறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளேன். தரும பரிபாலகராய் இப்போதுள்ளவர் கல்லூரியிற் படிப்பிக்கும் மாணவர்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாவலர் இட்ட விதை

## சைவ வித்தியாவிருத்திச் சங்கத்து 22-வது வருடாந்தக் கூட்டம்

இன்று நாவலர் திருநாள். எத்தானத்திலும் சிறந்த வித்தியாதானம் விஷயமாக எங்கள் நாவலர் பெருமான் அன்று கொண்டிருந்த லட்சியம் இன்று கைகூடி, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் என்னும் நிழலதரும் பெரிய தரு, சைவம் தழைக்கச் சேரவாரும் ஜகத்தீரே என்று அழைக்கிறது.

எங்கள் ஈழவளநாடு, இந்த உலக நாடுகளில் தானும் ஒன்றாய்த் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். அதற்கு இந்நாட்டிலே கல்வி விருத்தியடைய வேண்டும். அக் கல்வி விருத்திக்கு அரசாங்கமும் ஊரவரும் போட்டியிட்டு வித்தியாசாலைகளை ஸ்தாபிக்க வேண்டும். அரசாங்க வித்தியாசாலைகள், பொதுஜனங்களின் பாடசாலைகள் என்ற இரண்டும் அருகருகேயிருந்து போட்டியாக நின்றால் கல்வி விருத்தியாகும்" என்றிவ்வாறு சைவ வித்தியாவிருத்திச் சங்கக் காரியதரிசியும், சட்ட நிரூபண சபையிலே பலகாலம் அங்கத்தவராயிருந்தவருமான நியாயவாதி ஸ்ரீ சு. இராசரத்தினம் அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் நிகழ்ந்த சைவ வித்தியாவிருத்திச் சங்கத்து 22-ம் வருடாந்த கூட்டத்து அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது குறிப்பிட்டார்,

கூட்டத்துக்கு உப தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ வ. செல்லப்பா, ஜே. பி. அவர்கள் தலைமை வகித்தனர்.

தலைவர் தமது முகவுரையில் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் இந்த 22 ஆண்டு காலமாகச் சைவப் பெருமக்களுக்குச் செய்துவந்த தனிப்பெருந் தொண்டின் மாண்பினை எடுத்துக் கூறினர்.

இதன்பின் நியாயவாதி ஸ்ரீ சு. இராசரத்தினம் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார். இந்த அறிக்கையின் சாரம் ஏற்கெனவே இப்பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

காரியதரிசியின் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. இதன்பின் புத்தூர் சோமாஸ்கந்த ஆங்கில கலாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ எஸ். வீரசிங்கம் பின்வரும் கருத்துக் கொண்ட தீர்மானத்தை எடுத்தாண்டார்:

"இப்போது எங்கள் நாடு இருக்கும் நிலையில், அரசாங்கப் பாடசாலைகளும், மார்க்கப் பாடசாலைகளும் இப்போதுபோல இருக்கவேண்டும். வருங்காலத்திலே, ஒவ்வொரு சமயிகளும் தத்தமக்கு வேண்டிய பாடசாலைகளை ஸ்தாபித்து அவற்றிலே தத்தம் பிள்ளைகளுக்கு வேண்டிய சமயக் கல்வியும் லௌகிகக்கல்வியும் புகட்ட எவ்வித கட்டுப்பாடுமின்றிப் பூரண உரிமையுடையோராய் இருத்தல் வேண்டும். அப்படி ஸ்தாபிக்கப்படும் பாடசாலைகளுக்கு அங்கே கற்கும் அச்சமயப் பிள்ளைகளின்பொருட்டு அரசாங்கம் பண உதவி புரிதல்வேண்டும். அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலிலே. இப்படியாகச் செய்வோம் என்று வாக்குறுதி கொடுப்பவர்களையே இங்குள்ள நாலு பிரதான சமயிகளும் ஆதரிக்கவேண்டும்".

இத்தீர்மானத்தை ஸ்ரீ எஸ் இராஜரத்தினம் அநுவதிக்க, சர்வாங்கீகாரமாக நிறைவேறியது.

அடுத்த ஆண்டுச் சங்க நிருவாக உத்தியோகத்தர்பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: டக்ரர் எஸ் சுப்பிரமணியம் ஜே. பீ.; உபதலைவர், ஸ்ரீ வ. செல்லப்பா, ஜே. பீ. காரியதரிசி: ஸ்ரீ சு. இராசரத்தினம் நியாயவாதி. தனாதிகாரி: ஸ்ரீ A. K. நவரத்தினம், பிறக்ரர்; பாடசாலைகளின் மனேஜர் ஸ்ரீ சு. அட்சலிங்கம்.

## வீர நாவலர் பெருமான்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தவை: நாவலர் கற்றதெல்லாம் பனையோலை ஏட்டுச் சுவடிகள்தான். அவரது கல்விப்புலமைத் திறம் மிகவும் உயர்ந்தது. நிரம்பிய தன்மையுடையது. நாவலர் என்ற உயர்ந்த பட்டத்திற்கு அவர் மிகவும் உரிமையும் பொருத்தமு முடையவர் என்பது யாரும் மறுத்தற்கியலாது.

### சைவ உறைப்பு

நாவலரது தமிழின் புலமையும் நாவன்மையும் எத்துணைச் சிறப்பும் நிறைவு முடையனவோ, அதனினும் மிகப் பெரியன அவர் சைவத்திறத்திற் கொண்ட திண்மையும் உறைப்புமாம். அவர் சைவத் திறத்தினை உண்மையில் தமது உயிரினுஞ் சிறந்ததாகக் கொண்டொழுகிக் காத்தனர். "என்னிலுமினியா னொருவனுளன்." என்பது அவரது கடைப்பிடி. இந்நாளில் மலிந்து காண்பது போல வழவழ, குழகுழாச் சைவம், அரைச் சைவம், காற்சைவம் என்பது அவர் வாழ்க்கையில் எங்கும் எள்ளளவும் காணவியலாது. நூல் வழி எதுவோ அதுவே அவரது கொள்கையும் வாழ்க்கையுமாம். தவறுகண்டபோது இறைவனுக்கஞ்சிக்கண்டிப்பது தமது முதற்கடமை என்று கொண்டு வாழ்ந்தனர் தமது தமையனார் வேடிக்கையாக இவரது அன்பின் நிலையினை அளக்க ஒருநாள் பெரியபுராணத்தைப்பற்றி ஏதோ சிறிது தவறு சொன்னபோது, மிகச்சினந்தெழுந்து அவரை வாள்கொண்டு தண்டித்துச் சிவாபராதத்தைக் கழுவ எழுந்துவிட்டார். பின்னர் உண்மையினைச் சொல்லித் தேற்றியும், ஆயுள் வரையும் அவர்பால் உறவுகொள்ளாது ஒதுங்கினர் என்ற வரலாறு அவர் சரிதத்திற் கேட்கப்படுகின்றது; சென்னையில் நிகழ்ந்த "போலி அருட்பா மறுப்பு" என்ற வாதம் பற்றிய நிகழ்ச்சிகள் எல்லாம் சைவசமய பரமாசாரியர்களின் திருவாக்குக்களாகிய திருவருட்பாக்களுக்கு வழங்கும் பெயரை வேறு சாமானிய பாட்டுக்கு வழங்கலாகாது என்ற உறைப்பின் மேல் எழுந்தன என்பதும், அதனால் அவருக்கு நேர்ந்த துன்பங்களும் உலகமறிந்தவை.

### வீரம்

"ஆரங்கண்டிகை யாடையுங்
கந்தையே
பாரமீசன் பணியல தொன்றிலார்
ஈரவன்பினர் யாதுங் குறைவிலார்
வீரமென்றால் விளம்பத்
தகையதே"

என்பது அவரது எளிய வீர வாழ்க்கைக்கும் பொருந்தும்,

அக்காலத்திருந்த தமிழ் மன்னர்களும் பெரு மடாதிபதிகளும் நாவலரது பெருமைகளை உணர்ந்து சைவப் பெருநூல்களை அவராற் பரிசோதிப்பித்து அச்சிட்டு வெளியிட்டனர் ஆனால் யாரிடமும் யாதொருவகையான சன்மானமும் நாவலர் அவர்கள் பெறவில்லை. ஒரு தமிழ் மன்னர் இவரைத் தம [illegible] அக்குவருவிக்க விரும்பியபோது நாவலர் [illegible] இசையவில்லை என்றார், ஆனால் பின்னர் அவர் வற்புறுத்தி வேண்டிய போது சில நிபந்தனைகளின் பேரிற் செல்ல இசைந்தனர் என்றும், அவை யாவன சந்திக்கும் இடம்வரையில் பாத குறடு அணிந்து செல்லுதல் மேல் உத்தரியத்தை எடாமை, சன்மானம் பெறாமை என்பன என்றும் அவரது சரிதம் பேசுகின்றது. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்கள் சிதம்பரத்தில் இவரது சைவப்பிரகாசவித்தியாசாலையைக் கண்டருளி, அனுப்பிய சன்மானமாகிய சால்வைகளை இவர் அவர்களுக்கே திருப்பி அனுப்பிவிட்டனர் என்றும் கேட்கப்படுகிறது.

### வித்தியாசாலைகள்

இங்குமங்குமாக நிலவும்நாவலரது சைவப்பிரகாசவித்தியாசாலைகள் இரண்டும் சைவத்தின் இரண்டு கண்கள் என்ன விளங்குகின்றன,

### சரிதம்

நாவலரது வாழ்க்கை மக்களுக்கு உயர்ந்த முன்மாதிரியாயமையும் என்பதில் ஐயமில்லை. பெரியோர்களது வாழ்க்கை வரலாறு நமது வாழ்க்கையைத்திருத்தி மேம்பாடு செய்ய உதவுகின்றது என்ற ஒரு ஆங்கில பழமொழி நாவலர் சரிதத்திற்கு மிகவும் பொருந்தும். அவர் நண்பர்களுக்கும் பிறர்க்கும் எழுதிய கடிதங்கள் பெருநூல்களின் தரமாயமைந்து சிறந்த கற்பனைகளைப் போதித்து விளங்குகின்றன. அவருடனிருந்து உதவிய உறவினர் கைலாசபிள்ளையவர்கள் அவரதுசரிதஇயலை உள்ளபடி எழுதியுதவக் கிடைத்ததும் அவ்வுயர் வாழ்க்கையினை உலகுக்குக் காட்ட [illegible] அமைபுகளுள் [illegible]ன்.

# ஸ்பெயின் விஷயம்

## இனிநடக்கப்போவது என்ன?

அச்சு நாடுகள் என்று சொல்லப்பட்டநாடுகள் 4. அவையாவன ஜர்மனி, இற்றலி, ஜப்பான், ஸ்பெயின். இந்த நான்கனுள், முற் கூறப்பட்ட மூன்றும் யுத்தத்தில் முறியடிக்கப் பட்டுவிட்டன. ஆனால் ஸ்பெயின் மாத்திரம் முன்போல இன்னும் இருக்கிறது. அதன் சர்வாதிகாரியாக இருக்கும் சேனாதிபதி பிராங்கோ என்பவர், ஜெர்மனி-இற்றலி உதவியுடன்தான் பதவிக்கு வந்தவர்.

ஹிட்லர், முசோலினிக்கு நேர்ந்த கதியே சேனாதிபதி பிராங்கோவிற்கும் நிகழவேண்டும என்று சோவியத் ருஷியாவும், ஏனைய பல நாடுகளும் கூறிவருகின்றன. பிராங்கோ தலைவராக இருக்கும்வரை ஸ்பெயின் உலக சமாதானத்துக்குப் பங்கம் விளைத்துக்கொண்டே வரும் என்பதே இவற்றின் கூற்று.

உலகம் சமதர்மப் போக்கில் இருக்கும்போது, ஸ்பெயின் ஆட்சியைக் கலைப்பது ஆங்கில - அமெரிக்கக் கட்சிக்கு விருப்பமில்லை. யுத்தம் முடிந்து 18 மாதங்களுக்கு மேலாகியும், ஸ்பெயின் விஷயத்தில் ஆங்கில - அமெரிக்கக் கட்சியினர் தம் வழக்கமான வழவழாக் கொள்கையைக் கடைப்பிடித்தே வருகின்றனர்.

இவ்விஷயம் இப்போது ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் வந்துவிட்டது.

ஸ்பெயினில் உள்ள பிராங்கோ ஆட்சியை நீக்கவேண்டும். பிராங்கோ தானாக நீங்கி ஓடிவிடவேண்டும். இல்லையேல், ஸ்பானிஷ் மக்கள் அவரை நீக்கி அவர்க்குத் தண்டனை விதிக்க வேண்டும். இப்படிச் செய்யாதபட்சத்தில், ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் உள்ள நாடுகள் ஸ்பெயின் அரசாங்கத்துக்கு விரோதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது ருஷியக் கட்சி. இப்படி எல்லாம் இப்போது செய்யக்கூடாது என்று இங்கிலாந்து கூறுகிறது. இப்போதைக்கு வல்லரசுகள் ஸ்பெயினில் உள்ள தங்கள் ஸ்தானிகரைக் கூப்பிட்டு, ஸ்பெயினுடன் உள்ள அரசியல் தொடர்புகளைத் துண்டிப்பது என்று இங்கிலாந்து கூறிய யோசனையை ஐக்கியதேச ஸ்தாபனத்து அரசியல் நிர்வாகசபை அங்கீகரித்து இருக்கிறது.

ஸ்தானிகர்களை மாத்திரம் கூப்பிடுவதால், பிராங்கோ அஞ்சி ஓடிவிடுவாரா? ஸ்பெயின் விஷயங்களை ஆராய்வார்க்கு, அவ்விஷயம் இலகுவில் நடக்கும் காரியமல்ல என்பது விளங்கும். நேர்மாறாக, பிராங்கோ தனது அதிகாரத்தை இன்னும் அதிகமாகப் பலப்படுத்திக் கொண்டு வருகிறார். ஆகவே, அவரும் ஸ்பெயின் மக்களும் இத்தத் தீர்மானத்துக்கு அஞ்சி இணங்கமாட்டார்கள். அப்படியென்றால் இனி நடப்பது என்ன?

ஸ்பெயின்மீது அரசியற் போர், பொருளாதாரப் போர், ஆயுதப் போர் என்பவற்றை ஐக்கிய தேச ஸ்தாபனத்தைச் சேர்ந்த வல்லரசுகள் செய்யுமா? அப்படிச்செய்ய ஆங்கில - அமெரிக்கக் கட்சி விடுமா?

# வர்த்தக நிலையங்கள்

## அவற்றை இலங்கையர் மயமாக்க

இலங்கையில் பல அந்நிய வர்த்தக சமுதாயங்கள் இருக்கின்றன. இவற்றின் எதிர்காலம் என்ன? இவ்விஷயமாக இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இலங்கை வர்த்தகர் சங்கத்துத் தூதுக்கோஷ்டி யொன்று மாத்தறைப்பிரதிநிதி மிஸ்ரர் எச். டபிள்யூ அமரசூரியாவின் தலைமையில், மந்திர சபையினரை இவ்விஷயமாகச் சில தினங்கட்குமுன் கண்டு சில ஆலோசனைகளைத் தெரிவித்தது. இப்போதுள்ள அந்நிய வர்த்தகச் சமுதாயங்களின் சொந்தக்காரர் இறந்ததும், அவை இலங்கையர் கைக்கு மாற்றப்படல் வேண்டும். ஆனால் அச்சொந்தக்காரர், அச்சமுதாயங்களைத் தங்கள் உரிமைக்காரர்க்கு மாற்ற விரும்பினால், அவ்வுரிமைக்காரர் அச்சமுதாயங்களில் 100-க்கு 51 விகிதமளவான முதலுக்கே உரியவராயிருத்தல்வேண்டும். மீதி 49 விகிதமும் இலங்கையர்க்கு வழங்கப்படுதல் வேண்டும். இன்னும் ஓர் அந்நியவர்த்தக சமுதாயத்தினர் தம் தொழிலை இலங்கையர்க்கு மாற்றிவிட்டால், அதில் வேலைசெய்பவர்களில் 100க்கு 75 விகிதத்தினரும், உயர்தர உத்தியோகத்தரில் 100க்கு 40 விகிதத்தினரும் இலங்கையராகவே இருக்கச் சட்டமியற்றப்படல் வேண்டும் என்றின்னோரன்ன ஆலோசனைகளை வர்த்தகர் சங்கம் மந்திரசபைக்குச் சமர்ப்பித்தது.

இதன் பயனாக மேலே சொல்லிய ஆலோசனைகளை அநுசரித்து மந்திர நிருவாகசபை சில சட்டங்களை இயற்ற உத்தேசித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தியக் கலவரம்

## பிரிட்டிஷாரின் விளக்கெண்ணெய்க் கொள்கை

முதலில் ஒன்றைக் கூறுவது; பின் அதற்கு ஓர் வியாக்கியானம் செய்வது: சிலகாலம் செல்ல, அதே வியாக்கியானத்துக்கு இன்னோர் அர்த்தம் கொடுப்பது பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் சுபாவம். இந்தச் சின்னத்தனமான-ஏகாதிபத்திய அவாவினால் விளைந்துள்ள—கொள்கை பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் யாவர்க்கும் பொதுவானது. அதில் கன்ஸர்வேற்றிவ், லிபரல், தொழில் கட்சி என்றபேதம் கிடைக்காது இன்று இந்தியாவிலே நிகழ்ந்துள்ள அநர்த்தங்களுக்கும், தப்பபிப்பிராயங்களுக்கும் ஹிந்து—முஸ்லிம் வேற்றுமைக்கும் காரணம் இதுதான்.

எகிப்திலே இதுகாறும் பிரிட்டிஷ் இராணுவம் இருந்துவந்தது. அதனை வெளியேற்ற வேண்டும். அதற்காக எகிப்துடன் ஓர் புதிய உடன்படிக்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்யவேண்டும் என்ற கிளர்ச்சியின் பயனாக, பிரிட்டிஷ் அரசாங்கமும் எகிப்திய அரசாங்கமும் இப்போது சிலமாத காலமாகப் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தி ஓர் உடன்படிக்கையை ஆக்கிக்கொண்டனர். இந்த உடன்படிக்கைப் பிரகாரம் சூடான் என்னும் பிரதேசம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று எகிப்திய அரசாங்கம் எண்ணியிருந்தது. இவ்விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கம் எதுவும் பேசாது மவுனம் சாதித்துவிட்டது. ஆனால், இப்போது சூடான பிரதேசத் தேசாதிபதி அப்படியாக சூடானைப் பிரிட்டிஷ் அரசாங்கம் கைவிட முடியாது என்று கூறிவிட்டது. இது ஓர் பெரும் அரசியல் நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறது. முன் செய்துகொண்ட உடன்படிக்கையில், சூடான் எகிப்துக்கு ஒப்படைக்கப்படும் என எகிப்தியப்பிரதமர் ஸிட்கி பாஷா கூறி, பிரிட்டிஷாரைக் கேட்டார் நாங்கள் அப்படி எப்போது கூறினோம்; அந்த உடன்படிக்கையில் சூடான் சம்பந்தமாகவுள்ள விதிக்கு அதுவியாக்கியானம் இல்லையே என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கையை விரித்துப் புதிய ஓர் வியாக்கியானம் கூறுகிறது. இதன் பயனாக எகிப்தியப் பிரதமர் தம் பதவியைத் துறந்தார். ஏற்கெனவே எகிப்தியமக்கள் இவரைத் துணிவற்றவர் என்று குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

எகிப்தியமக்கள் இன்று ஆவேசம் கொண்டு நிற்கின்றனர். பிரிட்டிஷார்க்கு விரோதமான பல கிளர்ச்சிகள் அங்கே தினம்தோறும் தோன்றுகின்றன. எகிப்திய அரசாங்கமும் இக்கிளர்ச்சிகளை எப்படி அடக்கினாலும் அவை குறைவதாகத் தோன்றவில்லை. மத்திய கிழக்கு, தூர கிழக்கு சமீப கிழக்கு என்னும் முத்திறப்பட்ட கீழ்நாடுகளிலே இன்று பிரிட்டிஷாரின் சாயம் வெளுத்துவிட்டது என்பதை அட்லி அரசாங்கம் இப்போதாவது உணரவேண்டும். இந்தியாவிலே செய்யும் தந்திரத்தையும், எகிப்திலே ஆற்றும் சூழ்ச்சியையும் துருக்கியிலே டானல்ஸ் ஜலசந்தி விஷயமாகச் செய்யும் தகிடுதத்தங்களையும் இனி அறவே ஒழித்து, நேர்மையைக் கடைப்பிடித்து தம் மூட்டை முடிச்சுக்களுடன் பிரிட்டிஷார் வெளியேற வேண்டும். இல்லையேல் அவர்களைப் பலாத்காரமாக வெளியேற்றவேண்டிய சந்தர்ப்பம் குறித்த நாடுகளுக்கு ஏற்படக்கூடும்.

# எதிர்காலப் பொலிஸ்

## விசாரணைச்சபையின் அறிக்கை

பொலிஸ் நிர்வாகத்தை எவ்வாறு திருத்தி அமைக்கலாம் என்பதைப் பற்றி ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நீதியரசர் சூட்ஸ், ஸ்ரீ பீ. சரவணமுத்து, மிஸ்டர் ஸ்ரீநிஸங்க என்பவர்களைக்கொண்ட ஓர் விசாரணைச் சபை சில மாதங்களுக்கு முன் நியமிக்கப்பட்டது. இந்தச் சபையினர் பல இடங்களுக்கும் விஜயம் செய்து விசாரணை புரிந்து ஓர் அறிக்கையைத் தயார்செய்து இருக்கிறார்கள். அந்த அறிக்கை இப்போது தேசாதிபதியின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. தேசாதிபதி அதனை அங்கீகரித்ததும், அது பகிரங்கமாக்கப்படும்,

இப்போதுள்ள பொலிஸ் படையினரின் தொகை போதாது; இரண்டு மடங்காய் அதிகரிக்கவேண்டுமென்றும், இப்போதுள்ளதுபோல அந்நியநாட் டதிகாரிகளை இப்படைக்குத் தலைவராக நியமிக்காமல், இலங்கையில் சிவில்சேர்விஸ் உத்தியோகத்தர் ஒருவரையே அதிகாரியாக நியமிக்கவேண்டுமென்றும், தங்கள் அறிக்கையிலே விசாரணைச் சபையினர் சிபாரிசு செய்திருக்கின்றனர்.

இன்னும் இப்போது பொலிசாருடைய நிலைமை மிகவும் கேவலமானது என்றும், அதனைத் திருத்தி மாற்றி யமைக்க வேண்டுமென்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

இப்போது பொலிசார்க்கு உதவப்படும் உடை, இராணுவத்திற்கு உதவப்படுவதுபோல உள்ளது. இதனை மாற்றி வேறுவிதமான உடுப்புக் கொடுக்கவேண்டும்: நல்ல கல்வியறிவு பெற்றவர்களையே பொலிசாராக நியமிக்கவேண்டும் என்று இன்னோரன்ன பல ஆலோசனைகளை விசாரணைச்சபை தனது அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கிறது.

### வர்த்தகத் தூதர்

வேற்று நாடுகளுக்கு 3 வர்த்தகப் பிரதிநிதிகளை யனுப்ப இலங்கை மந்திரசபை தீர்மானித்துவிட்டது. அவர்கள் எந்த எந்த நாட்டுக்கென்பது கைத்தொழில் வர்த்தக மந்திரியால் இனி ஆலோசிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படவேண்டியதாகும்


### குத்தகை அல்லது விற்பனை

புன்னாலை தொல்புரத்தில் 372 பரப்பு நிலம் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு இருக்கிறது, தென்னை, பனை, வான்பயிர்களும் தோட்டச் செய்கைக்குப் போதிய நிலமும் உண்டு; விபரங்களுக்கு எஸ். ஆர். வைரமுத்து தபாற்கந்தோர் யாழ்ப்பாணத்தில் அறிந்து கொள்ளலாம்,

Mis 272, 13, 17, 20.12.46.

### அவசிய தேவை

பளையில் தேங்காய் தோட்டத்திற்கு, கணக்கரும் காவலாளியுமாக இருவர் தேவை. விபரங்களுக்கு இல: 39-மூன்றாங் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். நேரிலோ, அன்றேல் கடித மூலமாகவோ அறிந்துகொள்க.

Mis 268, 13-12-46.


### வருமானம் குறைகிறது

சென்றஆண்டுஅக்டோபர்மாதத்திலும் பார்க்க, இந்த ஆண்டுஅக்டோபரில் இலங்கையின் அரசிறைவருவாய் குறைந்துவிட்டது.

1945 அக்டோபர் வருவாய்: 34,095,786 ரூபா

1946 அக்டோபர் வருவாய்: 31,634,802 ரூபா

### வீர நாவலர் பெருமான்

(3ம் பக்கத் தொடர்ச்சி,

உலகானுபவம் இல்லாதவர். வைதிக சைவாசார சீலரல்லர். இத்தகைய ஒருவரை நாவலரின் தருமங்களைப் பரிபாலிக்க ஏற்படுத்திய நிருவாக சபை அங்கத்தினரே இவ்விஷயமாகப் பழிக்கத் தக்கவர். அவர்கள் தங்கள் கடமையை நன்கு செலுத்தினாரல்லர். முறைகேட்டினால் உண்டான பாவங்களுக்கு அவர்களே உத்தரவாதிகள்.

தருமபரிபாலனம் செவ்வையாக நடைபெறவில்லை யென்று சென்னை நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் காரணமாக இப்போதிருக்கும் தருமபரிபாலகர் தாமே தன் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாகத் தெரிவித்தனராம், இனியேனும் தகுந்தவரை நியமித்துக் கருமங்களை நாவலர் கருத்திற்குச் சிறிதும் மாறுபடாத வண்ணம் நடாத்துவிக்க வேண்டியது எமது கடனும்.

வேதநெறி தழைத் தோங்க!
மிகு சைவதத்துறை விளங்க !!

# கொழும்பு மேயர்

## தமிழருக்குப் பதவி கிடைக்குமா?

கொழும்பு நகரசபைத் தேர்தல் முடிந்துவிட்டதால், இனி மேயராக ஆர் வருவார் என்ற பிரச்சினை இப்போது எழுந்திருக்கிறது. முந்தி மேயர்பதவி வகித்துள்ள மிஸ்டர் ஆர். எப். எஸ். டீ மெல், மிஸ்டர் குணசிங்கா, மிஸ்டர். ஜோர்ஜ். ஆர். டி.சில்வா, மிஸ்டர் ஆர் ஏ டீ மெல்என்னும் நால்வரும்மீண்டும்அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கிடையேபோட்டிபலமாக இருக்கிறது. ஆனால் இவர்களில் எவரையேனும் ஆதரிக்க, சமதர்மக் கட்சிச்சார்பாகத் தெரிந்தெடுக்கப் பட்டுள்ள ஒருவர்க்கும், சமசமாஜிகள் இருவர்க்கும் விருப்பமில்லை. இன்னும் முஸ்லிம், தமிழங்கத்தவர்களும் இவர்களை ஆதரிப்பர் என்று சொல்வதற்கில்லை. இந்த நிலைமையில், கொழும்பு நகரசபையிற் பலகாலம் அங்கத்துவம் வகித்தவரான டக்டர். ஈ வி. இரத்தினம் அவர்களுடைய மகன் டக்டர். குமாரன் ரத்தினம் அவர்கள் மேயராகவர அபேட்சித்தால் அவர்க்கு அதிக ஆதரவு கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது,

ஸ்ரீ குமாரன் ரத்தினம் கும்பனித் தெரு "யூனியன் பிளேஸில்" தம் சொந்தப் பொறுப்பில் ஆஸ்பத்திரி வைத்து நடாத்துகிறார். அவருக்கு அதிக செல்வாக்குண்டு. அவர் கும்பனித்தெருப் பகுதியினரால், பெருந்தொகை வாக்குச் சம்மதங்களால் நகரசபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட் டிருக்கிறார். இப்போதுள்ள நிலைமையில் அவரே மேயராகத் தெரிவுசெய்யப்படுவார் என்று சொல்லலாம்.

# ஏழரைக் கோடி ரூ.

## சென்ற வருட மிச்சம்

1945-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கம் 1946-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஈறாகவுள்ள நிதிவருடத்தில் செலவுக்கு மிஞ்சிய வரவாக 7 கோடி 55 லட்சத்து 7 ஆயிரத்து 500 ரூபா இலங்கையரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கிறது

குறித்தஆண்டின் வருமானம்: 377,190 25 ரூபா. செலவு 801,682,755 ரூபா.

இந்த ஆண்டின் வருமானத்திற் பெரும்பகுதி ரேகுப் பகுதியிற் கிடைத்தது அவ் வருமானம்: 146,062,789 ரூபா. வருமான வரி முத்திரை முதலியனவற்றால் வருமானம்: 114,273,285.

செலவினங்களைப் பற்றிச் சொல்லுமிடத்து, அதிகமான செலவு கல்விப்பகுதிக்கே போயிருக்கிறது இந்த ஆண்டில் கல்வியின் பொருட்டு 41,8?1,821 ரூபா செலவாகியிருக்கிறது.

இன்னும் ஏனைய செலவுகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| சுகாதாரம்:— | ... | 29,988,845 ரூபா |
| விவசாயம்:— | ... | 24,578 010 ,, |
| பொதுக்கடன்:- | | 22,138,349 ,, |
| பென்ஷன்:— | ... | 18,583,620 ,, |


NEW IRON SAFES FOR SALE

புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele {Phone 68
{grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K K S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12 46—12-3-47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோலாலம்பூரில் இராமநாதன் விழா

இம்பி ரோட்டி லமைந்திருக்கும் கோலாலம்பூர் தமிழர் கலாவிருத்திச் சங்கத்து மண்டபத்தில், இலங்கையின் காலஞ்சென்ற மாபெரும் தலைவரான கௌரவ சேர் பொ. இராமநாதன் அவர்களின் ஞாபகார்த்ததின வைபவங்கள் 26-11-46ல் பிற்பகல் 5-30 மணிக்கு ஆரம்பமாயிற்று.

மேடையில் அலங்கரித்து வைக்கப்பெற்ற முழு உருவப்படத்தின் முன்பு இரண்டு நிமிஷ மௌன வணக்கம் முடிந்தவுடன் ஸ்ரீமதி சு இராஜேஸ்வரி சில கீதங்கள் பாடினர், பிற்பாடு மாபெருந் தலைவரின் வாழ்க்கையையொட்டி, ஸ்ரீமான் சி. சின்னத்துரை அவர்கள் Asst Secretary Malayan Union Secretariat) அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பலதுறைகளில் உயர்ந்த தொண்டுகள் தேசத்திற்காக இயற்றி "மாஷல் லோ" சட்டத்தின்கொடுமைகளை எதிர்த்துப் பேசிய வீரச் செயல்களையும் ஆழ்ந்த அரசியல்ஞானத்தையும் பேச்சாளர் வற்புறுத்தினர்.

11-2-1891ல் மாபெருந் தலைவர் வடமாகாணத்தின் சந்தைகளின் சீர்கேடான பரிபாலனத்தை ஒட்டிச் சட்ட நிரூபண சபையில் நடத்திய விவாதத்தை மூலாதாரமாகக்கொண்டு சில வித்தியார்த்திகள் ஒரு காட்சியை நடித்துக் காண்பித்தார்கள். இக்காட்சி குறித்த தினத்துக்கு முக்கிய அம்சமாகப் பாராட்டப்பட்டது.

பின்னர் சங்கீத வகுப்பு மாணவிகள் சிலரால் வாய்ப்பாட்டுக் கச்சேரி நடந்தேறியது. ஸ்ரீமான் K. சண்முகம் (Head Post Master K. L.) அவர்கள் சில குறிப்புகள் கூறியபின்னர் சங்கத்தலைவர் ஸ்ரீ பு. கனகசபை அவர்களின் நிறைவுரையுடன் வைபவங்கள் 8-30 மணிக்கு முடிவெய்தின.

—கடித

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

**சனி டிச 14**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழ் செய்திகள் 7.30 பவானி வி ஸ்ரீகண்டன் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி அலமேலு அம்மாள் பாட்டு 8.30 காலை இசை 9 முடிவு.

1 பவானி வி ஸ்ரீகண்டன் வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில்செய்திகள் 2.05 ஆங்கிலப் பேச்சு 2-15 டி ஆர் சந்தானம் பாட்டு 2-45 முடிவு.

மாலை 5 டி ஆர் சந்தானம் பாட்டு 5.40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி அலமேலு அம்மாள் பாட்டு 7-15 பார்ப்பதும் கேட்பதும் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதாசில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சித்ரகானம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 கே பி தேவராஜும் ஏாக்ஸ்டோன் 10 இசைவேளை 10-30 முடிவு.

**ஞாயிறு டிச 15**

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழ் செய்திகள் 7-30 காஞ்சிபுரம் எம் என் வெங்கடவரதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 ஆர் ஷண்முகசுந்தரம் வீணை 9 முடிவு

12 கதம்பம் 12.30 இரவல்கதை 12-45 சித்ரகூடம் 1 மணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜே துரைசாமி மையர் குழு 2 தமிழில்செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2-30 நீங்கள்கேட்டவை 3 முடிவு

மாலை: 5 சுலோசனா பட்டாபிராமன் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சுலோசனா பட்டாபிராமன் பாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 நிலவுரிமை 8 காஞ்சிவரம் எம் என் வெங்கடவரதன் பாட்டு 8-30 அர் ஷண்முகசுந்தரம் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆலத்தூர் சகோதரர்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 டி பி ர பகிரிஷ்ணன் பாட்டு 10-30 முடிவு.


### தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சுடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis. 211 1.11.46—30-4-47 (வெ)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினால், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)



## விளம்பரமின்றேல் பெரும் பலனில்லை



## India Super Tyres and Tubes

## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந் யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால்
தேவையானதற்கு இப்பொழுதே உங்கள்
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

**C. S. Nadarajah Chetty,**
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47


## இந்துசாதனம்

### ஆங்கில - தமிழ்ப் பிரசுரங்கள்

**பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)**

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


வெளிவந்து விட்டது!

## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கும்,
ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக
விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு மேற்படி நூலாசிரியர்
அவர்கள் செய்த பல திருத்தங்களோடு

**யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்**
வெளியீடாக அச்சிடப்பட்டிருக்கின்றது.

**விலை ரூபா 3** **மானேஜர்,**
சைவப்பிரகாச யந்திரசாலை,



## இலக்கிய வாசகம்

### மூன்றும் புத்தகம்

**நான்காம் வகுப்புப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது;**
(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

இதன் வசனபாகம்: சத்தியவிரதம் பூண்ட அரிச்சந்திர மகாராசனுடைய வரலாறு, இலகுவான இனிய செந்தமிழ் வசனநடையில் 18 பாடங்களாக வகுத்தெழுதப்பட்டுள்ளது.

செய்யுட்பாகம்: பஞ்சதந்திரத்தில் "காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதை (செய்யுள்) நீதிக் கவித்திரட்டு, சதகத்திரட்டு என்னுமிவைகள் அடங்கியுள்ளன பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை யென்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதியொன்றின் விலை சதம் 60 (அணு 10)**
இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிற் பெறற்பாலன,

**மனேஜர்,**
19-11-46. சைவப்பிரகாச யந்திரசாலை.


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, Desember, 13, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org